தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
&
இந்தியவானிலைத் துறை
தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

# திருவாரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (04.12.2024 முதல் 08.12.2024)

**அறிக்கை எண் 71/2024** **தேதி. 03.12.2024**

## திருவாரூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

திருவாரூர் மாவட்டத்தின் 29.11.24 முதல் 02.12.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 26 - 28 °செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை 23 - 28 °செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 94 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 92 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4 – 5 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் வட கிழக்கு திசை வரை பதிவானது.

## எதிர்பார்க்கப்படும் வானிலை திருவாரூர் (04.12.2024 முதல் 08.12.2024)

| கடந்த வார வானிலை (29.11.2024 முதல் 02.12.2024) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 08.12.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 29/11 | நாள்-2 30/11 | நாள்-3 01/12 | நாள்-4 02/12 | தேதி | நாள்-1 04/12 | நாள்-2 05/12 | நாள்-3 06/12 | நாள்-4 07/12 | நாள்-5 08/12 |
| 4.7 | 0.0 | 2.2 | 9.9 | மழை (மி.மீ) | 14 | 10 | 6 | 6 | 0 |
| 26 | 28 | 27 | 28 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 31 | 31 | 32 | 32 | 32 |
| 23 | 24 | 25 | 28 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 25 | 25 | 26 | 26 | 26 |
| 6 | 6 | 6 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 5 | 5 | 5 |
| 90 | 91 | 94 | 89 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 83 | 83 | 80 | 80 | 80 |
| 86 | 84 | 92 | 89 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 89 | 89 | 78 | 78 | 78 |
| 4 | 5 | 4 | 5 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 8 | 8 | 8 | 10 | 12 |
| வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | காற்றுவீசும் திசை | கிழக்கு தென் கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு |

## திருவாரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 01.12.2024 முதல் 07.12.2024 ஆகிய தினங்களுக்கு லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 31 - 32 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 25 - 26 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 83 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 89 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 8 - 12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| பொது | மழையை கருத்தில் கொண்டு, நீர் பாசனம், உரமிடுதல் மற்றும் மருந்து தெளிப்பதை தள்ளிபோடவும். தண்ணீர் தேங்கும் வயல்களுக்கு தகுந்த வடிகால் செய்யவும். |
| | வடிகால் வாய்க்கால்களை பன்னை குட்டையுடன் முறையாக இணைத்து மழை நீரை எளிதாக வடிப்பதுடன் மழை நீரை சேமிக்கவும் முடியும். |

| | | |
|---|---|---|
| **நெல்** | | தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளில் வடிகால் வசதியை அதிகப்படுத்தி, பயிர் மூழ்காதவாறு தேங்கியுள்ள நீரை வெளியேற்ற வேண்டும். பயிரின் நிலைக்கேற்ப ஊட்டச்சத்து நிர்வாகமும் மேற்கொள்ள வேண்டும். |
| | | தேங்கியுள்ள நீரை வடித்தவுடன், வரிசை நடவு மேற்கொண்ட வயல்களில் கோனோவீடர் அல்லது வீடர் கருவி மூலம் மண்ணில் காற்றோட்டத்தை ஏற்படுத்தி, வேர்கள் மண்ணில் உள்ள சத்துக்களை எடுத்துக்கொள்ள வழிவகை செய்ய வேண்டும். |
| **வாழை** | | வாழை மரங்கள் காற்று மற்றும் மழையால் சாயாமல் இருக்க, வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| **கால்நடைகள்** | **மாடு மற்றும் ஆடு** | கால்நடைகளை உயர்ந்த பாதுகாப்பான இடங்களுக்கு இடமாற்றம் செய்யவும். |

## குறுஞ்செய்தி

மழையை கருத்தில் கொண்டு, நீர் பாசனம், உரமிடுதல் மற்றும் மருந்து தெளிப்பதை தள்ளிபோடவும். தண்ணீர் தேங்கும் வயல்களுக்கு தகுந்த வடிகால் செய்யவும்.

**இயக்குநர்**